சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு தொழிற்பேட்டை அமைக்க இப்போது தான் அனுமதி கிடைத்து இருக்கிறது. மேற்படி நிலத்தில் சில ஆக்கிரமிப்புகள் உள்ள தால் பகுதி பகுதியாக மேம்பாட்டு வேலைகள் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டு உள்ளன. முதல் கட்டமாக 32 ஏக்கர் நிலத்தில் 50 இலட்சம் மதிப்புள்ள திட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க வேலைகள் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன. இந்தப் பணிகள் முடிந்ததற்குப் பிறகு ஏனைய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை எப்போது தொடங்கப்படும்? எப்போது முடியும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 ஏக்கரில் தொழிற்பேட்டை கள் அமைக்கின்ற திட்டம் நடப்பு ஆண்டு இறுதிக்குள்ளாக முடிக்கப்பட்டு, தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படும்.

உப்பிலியாபுரம் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*540—**திரு. ஆர். மூக்கன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றி யத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உப்பிலியாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல் படுத்துவதற்கான செயற்குறிப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய பார்வையில் உள்ளது.

(ஆ) இம் மதிப்பீடு குடிநீர் வடிகால் வாரிய அங்கீகாரம் பெற்று அரசின் அனுமதி பெறப்பட்ட பின், செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1990 மார்ச் 22]

திரு, ஆர். மூக்கன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்ட மதிப்பீடு எவ்வளவு ? எப்போது இதன் மூலம் பயன் அடைய முடியும்? எவ்வளவு மக்கள் இதனால் பயன் பெறுவார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு ரூ. 1,064.50 லட்சமாக இப்போது மதிப்பிடப்பட்டு அரசினுடைய பார்வைக்கு வந்திருக்கிறது. இதன் மூலமாக ஏறத்தாழ 94 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுமார் 3 இலட்சம் மக்கள் பயன் பெறுகின்ற வகையிலே இத் திட்டம் செயல்பட இருக்கிறது. இதற்காக நபர் ஒருவருக்கு ஆகின்ற செலவு ரூ. 481 ஆகக் கணக்கிடப்பட்டு உள்ளது. இந்தத் திட்டம் இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசினுடைய பார்வைக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு இந்தத் திட்டம் செயல்படத் துவங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களில் குழந்தை மற்றும் மகளிர் மருத்துவமனைகள்

***6742 டாக்டர் எம். மோசஸ் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

எல்லா மாவட்டங்களிலும் குழந்தை மற்றும் மகளிர் மருத்துவமனைகளைத் தனியே நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

9-55 மணி

டாக்டர் எம். மோசஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ' ' இல்லை ' ' என்று ஒரே வரியில் பதில் சொல்லிவிட்டார்கள். ஆனால் இது மிகவும் முக்கியமான தேவை என்பதை அரசு உணருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட மருத்துவமனைகளில் இதற்காகத் தனித்தனி பிரிவுகளாக குழந்தை மற்றும் மகளிர் மருத்துவமனைகள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ